**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 12 நவம்பர் 2018

Nestlé
Good Food, Good Life

## நெஸ்லே நிறுவனம் இலங்கையின் பாலுற்பத்தித் தொழிற்துறை மீது தொடர்ந்தும் முதலிட்டு வருவதுடன், தனது மூன்றாவது பால் குளிர்விப்பு மையத்தை மன்னார் மாவட்டத்தில் திறந்து வைத்துள்ளது

*உள்ளூர் சமூகத்தைச் சார்ந்த பெண் பாற்பண்ணையாளர்களுக்கு வலுவூட்டும் முயற்சி*

நாட்டில் பாலுற்பத்தித் துறையை அபிவிருத்தி செய்யும் தனது வலுவான முயற்சிகளை தொடர்ந்தும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்ற நெஸ்லே நிறுவனம், மன்னார் மாவட்டத்தில் தனது மூன்றாவது பால் குளிர்விப்பு மையத்தை மாவட்டத்தின் வட மேல் நகரான மடுவில் திறந்து வைத்துள்ளது. வெப்பக் காலநிலையில் பாலைக் குளிர்வித்துப் பேணிப் பாதுகாக்கும் களஞ்சிய வசதிகள் மிகவும் முக்கியமாக உள்ளதுடன், பாற்பண்ணையாளர்கள் தங்களது புத்தம்புதிய பாலை அதன் தரம் கெட்டுப்போகாது குருணாகலிலுள்ள நெஸ்லே தொழிற்சாலைக்கு அனுப்பி வைக்கும் வரையில் பேணிப் பாதுகாக்க இது உதவுகின்றது. கிட்டத்தட்ட 20,000 வரையான இலங்கை பாற்பண்ணையாளர்களுக்கு தற்போது உதவி வருகின்ற, நெஸ்லே நிறுவனத்தின் விசாலமான பால் சேகரிப்பு வலையமைப்பில் தற்போது இந்த சேகரிப்பு மையமும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இப்புதிய பால் குளிர்விப்பு மையமானது மடுப் பிரதேசத்திலுள்ள 300 பாற்பண்ணையாளர்களுக்கு, அதிலும் குறிப்பாக, பெரும்பான்மையான பெண் பாற்பண்ணையாளர்களுக்கு தாங்கள் உற்பத்தி செய்கின்ற பாலை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

*"நாம் உள்நாட்டு பாற்பண்ணையாளர்களுடன் இணைந்து தொடர்ந்தும் பணியாற்றி, உயர் தரம் கொண்ட பாலை அவர்கள் இன்னும் அதிகமாக உற்பத்தி செய்வதற்குத் தேவையான பயிற்சி மற்றும் வளங்களை அவர்களுக்கு வழங்கி வருகின்ற நிலையில், அதிகரித்த பால் விநியோகத்திற்கு உதவியாக, பாலை மூலமாகக் கொண்ட உற்பத்திகளை உற்பத்தி செய்யும் எமது ஆற்றலையும் நாம் மேம்படுத்தி வருகின்றோம். பாலுற்பத்தியில் இலங்கை தன்னிறைவு கண்ட ஒரு நாடாக மாற உதவுவதற்கான எமது பணிகளை நாம் ஆரம்பித்து தற்போது அப்பயணத்தில் நீண்ட தூரத்தைக் கடந்துள்ளதுடன், இன்று உள்நாட்டிலுள்ள பாற்பண்ணையாளர்களிடமிருந்து உயர் தரம் கொண்ட பாலைச் சேகரிக்க முடிந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். தொழிற்படையில் பெண்களின் பங்கேற்பு பொருளாதாரத்தின் இன்றியமையாத தேவையாக அமைந்துள்ள ஒரு காலகட்டத்தில், எமது பாற்பண்ணையாளர்களில் 30% ஆனோர் பெண்கள் என்பது எமக்கு மிகுந்த மனநிறைவளிக்கின்றது. உள்நாட்டு பாலுற்பத்தித் தொழிற்துறையை அபிவிருத்தி செய்வது மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் மத்தியில் வளமான, அகப்படுத்திய பாற்பண்ணைத் தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதன் மூலம், பாலை மூலமாகக் கொண்ட உயர் தர உற்பத்திகளை நாம் கட்டுபடியாகும் விலைகளில் நுகர்வோருக்கு வழங்கக் கூடியதாக அமைந்துள்ளதுடன், கிராமிய அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு உந்துசக்தியாகவும் அமைந்துள்ளது,"* என்று நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் குறிப்பிட்டார்.

மடு கால்நடை வளர்ப்பாளர்கள் வாழ்வாதார தொண்டர் சங்கத்துடன் இணைந்து இந்த குளிர்விப்பு மையத்தை நெஸ்லே நிறுவனம் திறந்து வைத்துள்ளது. இதற்கு முன்னர் கிட்டத்தட்ட 20 கிலோ மீட்டர் தொலைவில் வவுனியாவில் உள்ள குளிர்விப்பு மையமே இப்பிரதேச மக்களுக்கு மிகவும் அருகில் அமைந்துள்ள நெஸ்லே பால் குளிர்விப்பு மையமாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தளவு தொலைவில் அது அமைந்துள்ளமையால் தினசரி ஒரு தடவை, அதுவும் அதிகாலையில் மட்டுமே பாற்பண்ணையாளர்களிடமிருந்து நெஸ்லே நிறுவனத்தால் பாலைச் சேகரிக்க முடிந்தது. ஆனால், தற்போது இப்புதிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளமையால், நெஸ்லே அங்குள்ள பாற்பண்ணையாளர்களிடமிருந்து தினசரி இரு தடவைகள் பாலைச் சேகரிப்பதுடன், பாற்பண்ணையாளர்கள் காலை நேரங்களில் பாலைக் கறப்பதற்கு அதிக நேரத்தைச் செலவிடவும் வழிகோலியுள்ளது.

*"தாங்கள் உற்பத்தி செய்கின்ற பாலின் மூலம் முழுமையான பிரதிபலன்களை அடையப்பெறுவதில் இச்சமூகத்தைச் சார்ந்த மக்கள் இது வரை கஷ்டங்களுக்கு முகங்கொடுத்து வந்துள்ளனர். ஆனால் இப்புதிய வசதி மற்றும் நெஸ்லே நிறுவனத்தின் வலுவான ஆதரவு ஆகியவற்றுடன், தற்போது இந்த பாற்பண்ணையாளர்கள் தினசரி உற்பத்தி செய்கின்ற 1,500 லீட்டர்*

*பாலை அடுத்த ஆண்டளவில் தினசரி 5,000 லீட்டர்களாக அதிகரிக்க முடியும் என நாம் நம்புகின்றோம்,"* என்று மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரான சிவபாலன் குணபாலன் அவர்கள் குறிப்பிட்டார்.

தனியார்துறையைப் பொறுத்தவரையில், நாட்டில் உற்பத்தியாகும் புத்தம்புதிய பாலை அதிகளவில் கொள்வனவு செய்யும் நிறுவனமாக நெஸ்லே தற்போது திகழ்ந்து வருகின்றது. உள்நாட்டுப் பாற்பண்ணையாளர்களுக்கு முழுமையான பயிற்சி மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கி, உள்நாட்டு பால் கொள்வனவுக்கு உதவும் உட்கட்டமைப்பினை ஏற்படுத்துவதற்காக தனது உலக பாலுற்பத்தி நிபுணத்துவம் மற்றும் சுவிட்சலாந்து பால்-மாவட்ட முறைமை ஆகியவற்றை உபயோகிக்கின்றது. நெஸ்லே நிறுவனத்தின் முறைமைக்கு அமைவாக, அதன் குளிர்விப்பு மையங்கள் அனைத்தும், உள்ளூர் மட்டத்தில் மூன்றாம் தரப்பினாலேயே இயக்கப்படுகின்றன. இது உள்ளூர் சமூகங்கள் நெஸ்லே நிறுவனத்திற்கு புத்தம்புதிய பாலை விற்பனை செய்வதற்கு மேலதிகமாக, மற்றுமொரு வருமான மார்க்கத்தினை ஏற்படுத்திக் கொள்ளவும் வழிவகுத்துள்ளது.

நெஸ்லே நிறுவனம் தனது பாலுற்பத்தி அபிவிருத்திப் பணிகளின் ஒரு அங்கமாக, கால்நடைத் தீவனம் மற்றும் சினைப்படுத்தல், கால்நடை சுகாதாரம் மற்றும் பண்ணை முகாமைத்துவம் அடங்கலாக பல்வேறுபட்ட தொழில்நுட்ப தலைப்புக்கள் மற்றும் மிகச் சிறந்த நடைமுறைகள் தொடர்பில் பாற்பண்ணையாளர்களுக்கு கிரமமான அடிப்படையில் பயிற்சிகளை வழங்கி வருகின்றது. முக்கியமான உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகளையும் நிறுவனம் நன்கொடையளிப்பதுடன், பாற்பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்கான நிதியுதவிகள், அரசாங்கத்துடன் இணைந்து இலவச நடமாடும் கால்நடை சிகிச்சை மையங்கள் போன்றவற்றையும் வழங்கி வருகின்றது.

இத்தொழிற்துறையில் நெஸ்லே லங்கா நீண்ட காலமாக ஈடுபட்டுள்ளமை மற்றும் அது வழங்கி வருகின்ற நேரடியான உதவிகள் காரணமாக அண்மைக்காலங்களில் பெண் பாற்பண்ணையாளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் அதிகரித்துள்ளமையை நாம் காணக்கூடியதாக உள்ளதுடன், நிறுவனத்தின் நேர கால கொடுப்பனவுகள், வழக்கமான பயிற்சிகள் மற்றும் விரிவான தொழில்நுட்ப உதவி ஆகியன அவர்களை ஊக்குவித்துள்ளன. புத்தம்புதிய பாலைக் கொள்வனவு செய்வதில் 2017 ஆம் ஆண்டில் மாத்திரம் அது உள்நாட்டு பாற்பண்ணையாளர்களுக்கு புத்தம் புதிய பாலின் கொள்வனவிற்காக மட்டும் ரூபா 3.5 பில்லியன் தொகையைச் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரான சிவபாலன் குணபாலன் மற்றும் நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே ஆகியோர் இணைந்து நெஸ்லே குளிர்விப்பு மையத்தை திறந்து வைத்துள்ளதுடன், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறை பிரதிப் பணிப்பாளரான வைத்தியர் சிங்கராஜர் விமலகுமார், மடு பிரதேச செயலாளரான பாலகிருஷ்ணன் ஜெயகரன், இராணுவத்தின் 611 ஆம் படைப் பிரிவு தளபதியான கேணல் பந்துல அபேரத்ன, மடு பிரதேச கால்நடை சத்திர சிகிச்சை வைத்தியரான வைத்தியர் கே. கிருபாகரன், நெஸ்லே நிறுவனத்தின் தொழில்நுட்பத் துறை சிரேஷ்ட பிரதித் தலைமை அதிகாரியான தோமஸ் முல்லர் மற்றும் நெஸ்லே நிறுவனத்தின் வர்த்தக விவகாரங்கள் மற்றும் தொடர்பாடல்கள் துறை பிரதித் தலைமை அதிகாரியான பந்துல எகொடகே ஆகியோரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளனர்.